# நேசிப்பவர்கள்



அக்காவும் அண்ணாவும் என்னை நேசிக்கின்றார்கள்.



எல்லோரும் என்னை நேசிக்கின்றார்கள்..

நேசிக்கின்றார்

# 11. தேவபிதாவின் அழகான உலகம்

கமலா பாத்தி செய்கின்றாள்.





நீர் ஊற்றுகின்றாள்.



தம்பி உதவி செய்கின்றான்.

ஒளிக்கதிர்கள் படுகின்றன.





மழைத்துளிகள் விழுகின்றன.



புன்முறுவல் பூக்கின்றனர்.

# 12. தேவஇராச்சியத்தில் ஒற்றுமை



அமர :- அதோ ஒரு வண்ணத்துப்பூச்சி தேன் குடிக்கின்றது.

கமலா :- தேனீயும் அருகில் காணப்படுகின்றது.

ஆசிரியர் :- அவர்களது ஒற்றுமையைப் பாருங்கள்.

# 13. தேனீயும் வண்ணத்துப்பூச்சியும் (பாடல்)

சின்ன சின்ன தேனீ சிறிய நல்ல தம்பி
நீயும் நானும் சேர்ந்து போகலாமா தம்பி
சின்னக் கதைகள் பேசி சிரித்து மகிழ்ந்து நாமும்
தென்னந்தோப்பின் வழியாய் போகலாமா தம்பி!

வெள்ளை சிவப்பு ரோஜா விரும்பும் தேனைக் கொடுக்கும்
மெள்ளக் குனிந்து நாமும் குடித்து மகிழலாமே
கூடி வாழ்ந்து நாமும் கோடி நன்மை பெற்று
பாடி ஆடி என்றும் பாசமுடன் வாழ்வோம்.

தேன் குடித்து வாழும் பூச்சி தேனீ இரண்டும்
அன்புடனே ஒன்று சேர்ந்து வாழும் போது
ஏன் எதற்குச் சண்டை எங்கள் செல்வ மக்காள்
எங்கள் நாட்டில் அமைதி தோன்ற ஒன்று சேருவீர்.

